IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 92/2014

Deposition of Witness : PW 4

Name : ராஜேந்திரன் (வயது – 47)

Father's Name /W/o : த/பெ அர்ஜுன முதலியார்

Religion : இந்து

Calling : –

Address : பருத்திப்புத்தூர்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 03.03.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்துவருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். வா.சா.ஆ – 40 இறுதி செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்தது யார் என்றால் தீனதயாளன் தயார் செய்தார். நான் உடன் இருந்து சாட்சி கையெழுத்திட்டேன். யார் யார் சாட்சி கையொப்பமிட்டார்கள் என்றால் நான் மட்டும் தான் சாட்சி கையெழுத்திட்டேன். சர்வே எண்.340/2 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. இறுதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2 ஆவணங்களை குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் அது என்ன ஆவணங்கள் என்றால் தெரியாது.

2. இறுதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாமல் தீனதயாளன் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் நான் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. நான் விபரங்களை கேட்டு தெரிந்துகொண்டுதான் போட்டேன். வாதி தீனதயாளன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் இல்லை. அவருக்கு நிலம் வாங்கிகொடுத்தால் அவருக்கும் எனக்கும் பழக்கம் என்றால் இல்லை என் ஊரில் நிலம் வாங்கியதால் எனக்கு

பழக்கம். வழக்கு சொத்து எவ்வளவு தொகைக்கு பேசப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. இறுதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விபரங்கள் தெரியாமல் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. இறுதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இல்லை. என்ன விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்ன விபரங்கள் கையால் எழுதப்பட்டது என்றால் தேதி மற்றும் தொகை கையால் எழுதப்பட்டது மற்றவை தட்டச்சு செய்யப்பட்டது. பொதுவாக ஒரு ஆவணத்தில் இரண்டு நபர்கள் சாட்சி கையொப்பமிடுவார்கள் என்றால் எனக்கு தெரியாது.

4. இறுதி செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது எந்த கிராமத்தில் உள்ளது என்ற விபரங்கள் தெரியாது என்றால் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது ஆனால் சொத்து ஆத்தூர் கிராமத்தில் உள்ளது. இறுதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியபோது எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் ரூ.5 லட்சத்திற்கு மேல் என்று நினைக்கிறேன் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மேற்படி தொகை அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டதா என்றால் ஆம். மேற்படி தொகை மொத்த தொகையா அல்லது தவணை தொகையா என்றால் என்னிடம் இறுதி தொகை என்று தான் தெரிவித்தார்கள்.

5. மேற்படி ஆவணத்தில் மொத்த தொகை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இறுதி தொகை குறிப்பிட்டுள்ளது. வாதி எனக்கு தெரிந்த நபர் என்பதற்காக தான் நான் அவர் தயாரித்த ஆவணத்தில் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆவணத்தில் உள்ள விபரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**